தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-11-2012

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை சமயத்தில் மிளகாய் வற்றல் விலை சற்று குறையும்

உலகின் மொத்த மிளகாய் உற்பத்தியில் இந்தியா 25 சதவீத பங்களிப்பதோடு, மிகப்பெரிய உற்பத்தியாளராகவும், நுகர்வோராகவும், ஏற்றுமதியாளராகவும் உள்ளது. இந்தியா 2011-12ம் ஆண்டில் 12.50 இலட்சம் டன் மிளகாய் உற்பத்தி செய்துள்ளது. இந்தியாவிற்கு அடுத்தபடியாக, முக்கிய மிளகாய் உற்பத்தி நாடாக சீனா உள்ளது. 2010ம் ஆண்டில், சாதகமற்ற காலநிலையால் சீனாவில் மிளகாய் உற்பத்தி கடுமையாகக் குறைந்தது. இது இந்திய ஏற்றுமதியாளருக்கு பெரும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

இந்தியாவில் மிளகாய் அனைத்து மாநிலங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. மிளகாய் உற்பத்தியில் மொத்தப் பரப்பில் ஆந்திரப்பிரதேசம் 30 சதவீதமும், அதனைத் தொடர்ந்து கர்நாடகா 20 சதவீதமும், ஒரிசா 9 சதவீதமும், தமிழ்நாடு 8 சதவீதமும், மஹாராஷ்டிரா 1 சதவீதமும் மற்ற மாநிலங்கள் 18 சதவீதமும் பங்களிக்கின்றன.

இந்திய மிளகாய் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. பேடகி மற்றும் குண்டூர் மிளகாய் வகைகள் அவற்றின் நிறத்தால் அறியப்படுகிறது. மிசோரம் மற்றும் மணிப்பூர் மிளகாய் அதன் காரத்தன்மையால் பிரபலமானது. பேடகி மிளகாய் எண்ணெய் பிரித்தெடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 10-15 சதவீதம் ஏற்றுமதிக்கும், 85-90 சதவீதம் உள்நாட்டு நுகர்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது. மிளகாய்த்தூள், காய்ந்த மிளகாய், மிளகாய் ஊறுகாய், மிளகாய் பேஸ்ட், சீவல் மிளகாய் போன்ற பல வடிவங்களில் இலங்கை, அமெரிக்கா, நேபாளம், மெக்ஸிகோ, மலேசியா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தோனேஷியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து மிளகாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவின் மிளகாய் ஏற்றுமதி 2001-02ல் இருந்து அதிகரித்து வருகின்றது. 2010-11ல் இந்தியாவின் மிளகாய் ஏற்றுமதி 2.40 இலட்சம் டன்னாகவும் இதன் மதிப்பு சுமார் 1536 கோடி ரூபாயாகவும் இருந்தது. 2011-12ல் 2.41 இலட்சம் டன்னாகவும் இதன் மதிப்பு 2144 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. ஏற்றுமதி மதிப்பின் அதிகரிப்பிற்கு காரணம் மிளகாய் விலை உயர்வே ஆகும்.

இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் மலேஷியாவிற்கு 26 சதவீதம் ஏற்றுமதி ஆகிறது. இதனால் மலேஷியா மிக முக்கிய இறக்குமதியாளராக உள்ளது. இதனைத் தொடர்ந்து 19 சதவீதம் இலங்கைக்கும், 17 சதவீதம் வங்காள தேசத்திற்கும், 14 சதவீதம் அமெரிக்காவிற்கும் மற்றும் பிற நாடுகளுக்கு 16 சதவீதமும் ஏற்றுமதியாகிறது.

நடப்பு ஆண்டில், வங்கதேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில், மிளகாய் உற்பத்தி நன்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்நாடுகளுக்கான மிளகாய் ஏற்றுமதி குறையும். மேலும், சீனாவிலும், மிளகாய் உற்பத்தி அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனால், சர்வதேச சந்தையில், சீனா நமக்குப் போட்டி நாடாக இருக்கும்.

பொதுவாக, மிளகாய் ஏற்றுமதியைப் பொறுத்தே, அதன் விலை உள்நாட்டில் இருக்கும். இவ்வாண்டு, ஏற்றுமதி குறையும் நிலையில், இதன் விலை மேலும் சரிவடைய வாய்ப்புள்ளது.

2010-11ம் வருடத்தில் தமிழ்நாட்டில் 21690 டன் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. ராமநாதபுரம் (சம்பா), தூத்துக்குடி (குண்டு), சிவகங்கை (சம்பா), விருதுநகர் (சம்பா), திருநெல்வேலி (சம்பா) மற்றும் சங்கரன்கோவில் (சம்பா மற்றும் குண்டு) ஆகிய மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தி அதிகமாக செய்யப்படுகிறது. ராமநாதபுரமும், தூத்துக்குடியும் பரப்பளவில் 62 சதமும் உற்பத்தியில் 37 சதமும் பெறுகிறது. தமிழ்நாட்டில் 58 சதம் மிளகாய் மானாவாரியில் உற்பத்தி ஆகிறது. குளிரூட்டப்பட்ட இடத்தில் மிளகாய் வற்றலை வண்ணம்கெடாமலிருக்க சேமித்து வைப்பது நன்று. குளிர்பதனத்தில் சேமித்துவைத்தால் 8-10 மாதங்கள்வரை வைக்கலாம். தமிழ்நாட்டில் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் நாற்றங்கால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விதைக்கப்பட்டு பிப்ரவரி-மார்ச்சில் மிளகாய் அறுவடை செய்யப்படுகிறது. ஏப்ரல்-மே மாதங்களில் அதிகளவு வரத்து வரும். அறுவடை சமயத்தின் விலையை தெரிந்துகொள்ள விவசாயிகள் தற்போது ஆர்வமாக உள்ளனர். அதனால் நவம்பர் மாதத்தில் மிளகாய் விதைப்பு முடிவுகளை விவசாயிகள் சரியாக எடுக்க முடியும்.

மத்தியப் பிரதேசத்தில் ஏற்கெனவே அறுவடை துவங்கப்பட்டு 70 இலட்சம் மூட்டைகள் குண்டூருக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி 45-60 கிலோ கொண்ட மூட்டைகள் 60 இலட்சம் ஆந்திராவில் இருப்பில் உள்ளன. ஆந்திராவில் 1.2 இலட்சம் எக்டரில் மிளகாய் விளைவிக்கப்படுகிறது. இது டிசம்பர், ஜனவரியில் அறுவடையாகும். சுமார் 11.50 இலட்ச டன்கள் 2012-13ல் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் மூன்று இலட்சம் டன்கள் இருப்பில் உள்ளது. இக்காரணங்களினால் வரும் மாதங்களில் மிளகாய் விலையில் அழுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய விலைகளை ஆராய்ந்தது. அதன் விளைவாக, மார்ச்- ஏப்ரல் 2013ல் மிளகாய் வற்றல் விலை கிலோவிற்கு சுமார் ரூ.50 இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விலையைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் மிளகாய் விதைக்க முடிவெடுக்க பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-2431405.

<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-6611284.

மக்கள் தொடர்பு அலுவலர்